முத்தரசி
கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME : 1 ISSUE : 1 AUG- 2023
2023

# கம்பராமாயணத்தில் சகோதரத்துவச் சித்திரிப்பு

**முனைவர் க. இரவி**

உதவிப்பேராசிரியர், தமிழியல்துறை,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,அண்ணாமலைநகர்

## முன்னுரை

உலகின் தொன்மையான காப்பியங்கள் புராணங்களாகவே அமைந்துள்ளன. அதிலும் இதிகாசங்கள் என்று போற்றப்பெறும் இராமாயணம்-கம்பராமாயணத்தில் மனித சமூகம் நட்புறவுடன், எல்லோரையும் சமமாகக் கருதி வாழும் வாழ்வியல் நெறியைச் சித்திரிக்கின்றது. இதிகாசங்களில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவகையில் படைக்கப்பட்டது கம்பராமாயணம் ஆகும். அது மனிதவாழ்க்கையின் பொருளை எடுத்துரைப்பதோடு எக்காலத்திற்கும் உரியதான அறக்கருத்துக்களைக் கதைப்போக்கில் உணர்த்தி நிற்கிறது. இராமகாதையில் இராம-இலக்குவர்களின் சகோதர உணர்வு பெருமைபட இன்றும் பேசப்படுகிறது. உறவுகளில் சகோதரத்துவத்தின் தேவை வலியுறுத்தப்படுகின்றது. இராமாயணத்தில் இடம்பெறும் எல்லாப் பாத்திரங்களிடையேயும் சகோதர உணர்வு இழையோடுவதைக் காணலாம். அவ்வகையில் இராம-இலக்குவ-பரத-சத்ருக்கனன் ஆகியோர் ஒருவர் மற்றவர்மீது கொண்டிருந்த சகோதர உணர்வு இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்படுகின்றது.

## வாழ்வியலில் உடன்பிறந்தார் சிறப்பு

மக்கள் பின்பற்றத்தக்க வாழ்வியல் நெறி, மக்கட்பாசம், சகோதரத்துவம், தனிமனித ஒழுக்கம், பிறனில் விழையாத பேராண்மை முதலியவற்றைக் கதைப் போக்கில் விவரித்து மனிதவாழ்க்கையைச் செம்மைப்படுத்தத் துணைபுரிவது கம்பராமாயணன் ஆகும். இராமாயணம் பலராலும் போற்றப்பெறும் சிறப்புக்குரியது. அது வழிபாட்டுக்குரிய நூலும் ஆகும். இதன் சிறப்பினைக் கருதியே, ‘கற்றார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ?’ என்று நம்மாழ்வார் இராமகாதையின் சிறப்பினை எடுத்துரைப்பார்.

## இராமாயணத்தில் சகோதரப் பண்பு

தசரதனின் மனைவியருள் கோசலை, மூன்றுலகும் ஈன்றானை முதல் மகனாகப் பெற்றாள். கைகேயி பரதனை ஈன்றாள். சுமித்திரை இலக்குமணனையும் சத்துருக்கனனையும் பெற்றெடுத்தாள். இந்நால்வரும் ஒற்றுமையுணர்வோடு இருந்தாலும் விதியும், சூழ்நிலையும் இவர்களைப் பிரித்தது. விதியும் மதியும் இவர்களைப்

SAMPLE

பிரித்தாலும் இவர்கள் எவ்வாறு சகோதரத்துவத்துடன் வாழ்ந்தார்கள் என்பதே இக்காவியத்தில் இருந்து மனித சமூகம் பெறத்தக்க பாடமாகும்.

"ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்த்

தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கரும் தவமேற் கொண்டு

பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி

ஏழிரண்டு ஆண்டின் வாவென்று இயம்பினன் அரசன்"

(கைகேயி சூழ்வினைப்படலம், பா. 10)

என்று அரச ஆணையை வழங்குகின்றான் தசதரன். இதனைக் கேட்கும் இராமனின் முகம் அப்பொழுது அலர்ந்த செந்தாமரையின் மலர்போல இருந்தது. தான் ஆளாவிட்டாலும் தனது தம்பியருள் ஒருவன் நாடாள்வதைப் பெருமையாகவே கருதினான் இராமன் என்பதனை,

"..............என்

பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ?" (மேலது, பா. 115)

என்று எடுத்துரைப்பார் கம்பர். இதில் இராமன் தன் உடன்பிறப்பின்மீது கொண்டிருந்த பற்றுதல் வெளிப்படுத்தப்படுவதனை அறியலாம்.

## இலக்குவனின் சகோதரப் பற்று

தன் பெரியன்னை தன் அண்ணனுக்குக் கிடைக்க வேண்டிய அரசினைத் திருப்பிப் பெற்றுக் கொண்டாள் என்ற செய்தியைக் கேட்ட இலக்குவன்,

"மூட்டாத காலக் கடைத்தீயென

மூண்டு எழுந்தான்" (நகர்நீங்கு படலம், பா. 108)

என்று கொதித்தெழுந்ததாகக் காட்டுகிறார் கம்பர். கோபத்தின் உச்சியில் இலக்குவன் தெருவிற்கே வந்து பேசத் தொடங்குகின்றான். இராமனுக்கு முடிகவிக்கத் தடை செய்வதற்கு எவர் வந்தாலும் அவரைக் கொன்று வென்று, வெற்றி மகுடத்தை என் தலைவனான இராமனுக்கு இன்றே சூட்டி மகிழ்வேன்! என்று அரற்றுகின்றான்.

"விண்ணாட்டவர் மண்ணவர் விஞ்சையர் நாகர் மற்றும்

எண்ணாட்டவர் யாவரும் நிற்கவோர் மூவராகி

SAMPLE

மண்ணாட்டுநர் காட்டுநர் வீட்டுநர் வந்தபோதும்

பெண்ணாட்டம் ஓட்டேன் இனிப்பேருல கத்துள் என்னா" (மேலது, பா. 122)

என்று வீரவாதம் செய்து தெருவில் திரிகின்றான். இங்ஙனம் திரிந்து கொண்டு அண்டகோலம் பிளவுபட்டுத் தகரும்படி எழுப்பிய நாண் ஒலி சுமித்திரையின் கோயிலிலிருந்த இராமனது செவியிற் படுகின்றது.

இராமன் உடனே ஓடிவந்து, தம்பீ! பொறு! பொறு! என்று அவனைச் சமாதானப்படுத்துகிறான். இருவரும் சுமித்திரையின் கோயிலை அடைகின்றனர். "மகனே! இராமன் செல்லும் காடுதான் அயோத்தி. அந்த இராமனே நினக்கு தயரத மன்னன். பூங்குழல் சீதையே நினது தாய்! என்று கருதியவண்ணம் செல்க. இனி இங்கு நிற்பதும் குற்றமாகும். இராமனின் தம்பி என்று கருத இடந்தராமல் அடியவனைப்போல் அவன் ஏவுந்தொழிலைச் செய்து இராமன் மீண்டு அயோத்திக்கு வந்தால் அவனுடன் வருக. அப்படியில்லாமல் போனால் நீ முன்னரே உயிரைத் துறந்துவிடு" என்னும் சுமித்திரையின் உபதேசமொழி இலக்குவனை அமைதிப்படுத்துகின்றது.

## பரதனின் சகோதர உணர்வு

பரதன், இராமனைத் தந்தையாகவும் தாயாகவும் இறைவனுமாகக் கொண்டவன் என்பதனை,

"வாக்கினால் வரந்தரக் கொண்டு மைந்தனைப்

போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பார்உனக்கு

ஆக்கினேன் அவன்அது பொறுக்க லாமையால்

நீக்கினான் தன்உயிர் நேமிவந்து" (பள்ளிப்படை, பா. 58)

என்பார் கம்பர். கேகய நாட்டினின்றும் திரும்பிய பரதனிடம் கைகேயி, இராமன் தம்பியுடனும் மனைவியுடனும் கானகம் சென்றதைத் தெரிவிக்கின்றாள்.

இச்செய்தியைக் கேட்டதும் பரதனுக்கு வெகுளி பொங்கி வருகின்றது. பரதன் கைகேயியைத் தனது தாய் என்று உயிரோடு விட்டான். இவளைக் கொன்றால் இராமன் சினங்கொள்வானே! என்று கொல்லாது கடுஞ்சொற்களால் இடித்துக் கூறுகிறான். இவ்விடத்தில் இராமன்மீது கொண்ட சகோதரப்பற்று சினத்தைக் கிளப்பி விடுவதைக் காண்கிறோம்.

SAMPLE

இராமனை மீட்டு வருவதற்காகக் கானகம் சென்ற பரதன், வழியில் ஒரு சோலையில் தங்கியபோது கண்ணீராகிய அருவியில் நீராடுவதும், காய், கனி கிழங்குகளை உண்பதும், இராமன் தங்கியிருந்த புழுதியில் அமைந்த புல்லணையில் தங்கியிருப்பதுமான செயல்பாடுகள் அவனது சகோதரப் பாசத்தின் வெளிப்பாடாக அமைந்துள்ளன.

வசிட்டன், தேவர்கள் முதலியோர் அறிவுரைப்படி பரதன் பதினான்கு ஆண்டுகள் நந்தியம்பதியிலிருந்து கொண்டு அரசாளவும், அந்தக் காலம் கழிந்தவுடன் இராமன் திரும்பாவிடில் தான் தீயில் புகுந்து இறப்பதாகவும் கூறி, அவனது திருவடி நிலைகளைப் பெற்றுத் திரும்புகின்றான்.

பதினான்கு ஆண்டுகள் கழிந்தும் இராமன் வராததால் பரதன் சத்துருக்கனனைத் தீயமைக்கும்படிக் கட்டளையிடுகிறான். இதனை அறிந்த கோசலை,

“ஒப்பெழுத வொண்ணாத கற்புடையாள்
வயிறுபுடைத்து அலமந்து ஏங்கி
இப்பொழுதே உலகிற்கும் யாக்கையினை
முடித்தொழிந்தான் மகனே என்னா
வெப்பெழுதி னாலன்ன மெலிவுடையாள்” (மீட்சிப்படலம், பா. 226)

என்று ஓடிவந்ததாகக் கூறுவார் கம்பர். அப்போது பரதன் திடுக்கிட்டு அவளது பாதங்களை வணங்கினான். அவளும் பரதனைத் தழுவிப் பிடித்துக் கொண்டு பேசுகின்றாள். தீயில் விழாது தடுத்துக் கூறுதலை ஏழு பாடல்களில் படம்பிடித்துக் காட்டுவார் கம்பர். அவற்றில்.

“எண்ணில் கோடி இராமர்கள் என்னினும்
அண்ணல் நின்னரு ளுக்கருகா வாரோ
புண்ணி யம்எனும் நின்னுயிர் போயினால்
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ?" (மேலது, பா. 232)

என்னும் பாடல் தரும் கருத்து சிந்திக்கத்தக்கதாகும். இராமன் ஒருவனேயன்றி பல கோடி இராமர்கள் கூடினாலும் பரதனது அன்புக்கு ஒத்தவர் ஆவரோ? ஆகார் என்கிறாள். கோசலையின் வாய்மொழியாகப் பரதனின் சகோதர உணர்வு புலப்படுத்தப்படுகின்றது.

SAMPLE

**சத்துருக்கனனின் சகோதார உணர்வு**

இராமகாதையில் அதிகம் பேசப்பெறாத பாத்திரம் சத்துருக்கனன் ஆகும். இராமனைத் திரும்பவும் காட்டிலிருந்து நாட்டுக்கு அழைத்து வர சேனையுடன் பரதன் காட்டுக்குப் புறப்படுவதற்கு ஏற்பாடு செய்கிறான். பரதனும் சத்துருக்கனனும் சேனையுடன் செல்லத் தொடங்குகின்றனர். அவர்கள் நகரவாசலை அடையும்போது மந்தரை எதிர்ப்படுகின்றாள். சத்துருக்கனன் மனம் கொதித்து அவளைப் பற்றி விண்ணில் செலுத்திக் கொல்ல நினைக்கையில் அவனைத் தடுத்து நிறுத்துகின்றான் பரதன்.

பதினான்கு ஆண்டுகள் கழிந்து இராமன் பரத்துவாசர் ஆசிரமத்திலிருந்து கொண்டு தன் வருகையை அனுமன் மூலமாகச் சொல்லி அனுப்புகின்றான். குறிப்பிட்ட நாளில் அனுமன் திரும்பி வராததால் பரதன் தன் சூளுரைத்தவாறு எரியுள் புகுந்து உயிர்விட ஆயத்தமாகின்றான். தன் தம்பி சத்துருக்கனனை வரவழைத்து அவனை இறுகப் புல்லிக்கொண்டு,

“சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்

மன்ன தீயிடை யான்இனி வீடுவன்;

மன்னன் ஆதிஎன் சொல்லை மறாது” (ஆறுசெல்படலம், பா. 54)

என்று வேண்டுகின்றான். இக்காட்சியை, ந. சுப்புரெட்டியார், “என்றுமே அதிகம் பேசாத சத்துருக்கனன் பேசும்போது அவனிடம் உணர்ச்சிவெள்ளம் பொங்கிவழியக் காண்கிறோம். உணர்ச்சிப் பெருக்கிலும் கோபத்திலும் நேர்மையிலும் எள்ளளவும் இலக்குவனுக்குக் குறைந்தவனில்லை சத்துருக்கனன் என்பதைக் காண்கிறோம்” (ப. 48) என்றுரைப்பார்.

## முடிவுரை

இராமாயணக் காவியம் பயிலும் தொறும் இலக்கிய இன்பம் தருவதோடு, வாழ்வியல் அறங்களையும் கதைப்போக்கில் உணர்த்தவல்லதாகும். ‘உலகில் எவை அழிந்துபோனாலும் அன்பும் அறமும் எப்போதும் நிலைத்து நிற்கும்” என்ற கருத்தினை உணர்த்தவல்லது.

இராமாயணக் காவியத்தில் இடம்பெறும் நான்கு சகோதரர்களும் ஒருவருக்கொருவர் சகோதரப் பற்றில், பாசத்தில் விட்டுத் தராதவர்களாகத் திகழ்வதனை இச்செய்திகளால் உணரமுடிகின்றது.

SAMPLE

கம்பராமாயணத்தில் இராமன் - இலக்குவன் - பரதன் - சத்துருக்கனன் ஆகியோரின் சகோதரப் பற்று மிக உயர்வாகவும் படிப்பவர்க்கு சகோதரத்துப் பண்பினை உணர்த்துவதாகவும் அமைந்துள்ளது. ஒவ்வொருவரது இன்பதுன்பங்-களிலும் ஒருவர் பங்கேற்பதனை அறியமுடிகின்றது.

துணைநின்றநூல்கள்:


1. கம்பராமாயணம், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு, 2010
2. ந. சுப்பு ரெட்டியார், பண்பாட்டு நோக்கில் கம்பன் காவியம், 1987


SAMPLE